**செய்தி வெளியீடு எண்: 147** **நாள்: 27.02.2018**

# அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) வழங்கும் விருதுகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ளன

அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (Association of State Road Transport Undertakings - ASRTU) ஆண்டு தோறும் வழங்கும் விருதுகளில் 2016–17ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட 35 விருதுகளில் 11 விருதுகளை மாநகர் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர் மற்றும் கும்பகோணம் ஆகிய கழகங்கள் பெற்றுள்ளன.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் வளங்கள் மற்றும் செயல்திறனை ஆராய்ந்து பொதுவான கட்டமைப்பின் கீழ் கொண்டு வர 1965ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13ஆம் நாள் அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) ஏற்படுத்தப்பட்டது. இக்கூட்டமைப்பு மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பில் உறுப்பினர்களாக 62 மாநில போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன.

இக்கூட்டமைப்பு ஆண்டுதோறும் அனைத்து மாநில போக்குவரத்துக் கழகங்களை ஊக்குவிக்கும் வண்ணம் அவற்றின் செயல்திறன்களை ஆய்வு செய்து விருதுகள் வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து விருதுகள் பெற்று வருகின்றன.

புது தில்லியில் அனைத்து இந்திய மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) 27.02.2018 அன்று நடத்திய விழாவில், 2016–17ஆம் ஆண்டிற்காக, தமிழ்நாட்டில் உள்ள ஆறு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்ட பதினொன்று (11) விருதுகளை போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

### அனைத்து மாநில சாலை போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு – 2016–17 விருது விபரங்கள்

| வரிசை எண். | கழகம் | விருது வகை | விருது |
|---|---|---|---|
| 1 | மா.போ.க | மாநகரப் பேருந்துகள் – உயர்ந்தபட்ச உருளிப்பட்டையின் செயல்திறனுக்காக | முதலிடம் கேடயம் |
| 2 | | 3000 பேருந்துகளுக்கு மேல் உள்ள போக்குவரத்துக் கழகங்களில் ஒரு லிட்டர் டீசலுக்கு அதிகமான கி.மீட்டர் இயக்கத்திற்காக (4.40 KMPL) | முதலிடம் கேடயம் |
| 3 | அ.வி.போ.க. | புறநகர் பேருந்துகளில் பேருந்து உற்பத்தித் திறனில் உயர்ந்தபட்ச செயல்திறனுக்காக (533.2 கி.மீ) | முதலிடம் கேடயம் |
| 4 | | புறநகர் சேவையில் எரிபொருள் 1 லிட்டருக்கு இயக்கப்படும் தூரத்தில் அதிகபட்ச முன்னேற்றம் (5.10இலிருந்து 5.16) | இரண்டாமிடம் கேடயம் |
| 5 | த.அ.போ.வ.க (விழுப்புரம்) | குறைந்தபட்ச இயக்க செலவுக்கான விருது (வரி நீங்கலாக) - புறநகர் பிரிவு (1001க்கு மேல் 4000 பேருந்துகள்) – 30.93 CPKM | முதலிடம் கேடயம் |
| 6 | | புறநகர் சேவையில் 1 லிட்டர் டீசலுக்கு அதிகமான கி.மீட்டர் இயக்கத்திற்காக ( 1001 – 4000 பேருந்துகள்) 5.48 KMPL | முதலிடம் கேடயம் |
| 7 | | புறநகர் பேருந்துகளில் பேருந்து உற்பத்தித் திறனில் உயர்ந்தபட்ச செயல்திறனுக்காக (512.93 கி.மீ.) | இரண்டாமிடம் கேடயம் |
| 8 | த.அ.போ.வ.க (சேலம்) | புறநகர் பேருந்துகளை இயக்கும் கழகங்களில் உருளிப்பட்டை செயல்திறனில் தொடர்ச்சியாக 4 வது முறையாக முதலிடத்தை பெற்றுள்ளது. | முதலிடம் சான்றிதழ் |
| 9 | த.அ.போ.வ.க (கோயம்புத்தூர்) | நகர பேருந்து இயக்கத்தில் அதிகபட்ச முன்னேற்றம் ஒரு லிட்டர் டீசலுக்கு அதிகமான கி.மீட்டர் இயக்கம் (4.84இலிருந்து 5.03 KMPL) | முதலிடம் கேடயம் |
| 10 | த.அ.போ.வ.க (கும்பகோணம்) | உயர்ந்தபட்ச உருளிப்பட்டையின் செயல்திறனுக்காக | முதலிடம் கேடயம் |
| 11 | | ஒரு லிட்டர் டீசலுக்கு அதிகபட்ச கி.மீட்டர் இயக்கம் (1001 – 4000 பேருந்துகள்) (5.51 KMPL) தொடர்ச்சியாக 4 வது முறையாக இந்த ஆண்டும் (2016–17) விருது | முதலிடம் சான்றிதழ் |

| Details of the Award FOR THE YEAR 2016-17 | | | | |
|---|---|---|---|---|
| **STUs** | **Sl. No.** | **Award Name** | **Purpose for which given** | **Winner position/ Rank** |
| MTC | 1 | ASRTU Award | Highest Tyre performance (5.35 - Moving avg. of new tyre consumed per lakhs eff. Kms. During 2014-15 to 2016-17) | Winner Award |
| | 2 | ASRTU Award | Highest KMPL - STU having fleet above 3000 ( 4.40 KMPL) | Winner Award |
| SETC | 3 | ASRTU Award | Highest performance in Vehicle productivity- Mofussil Services (533.22 Eff.Kms/Veh/Day) | Winner Award |
| | 4 | ASRTU Award | Maximum Improvement in KMPL (5.10 to 5.16) -Mofussil Service | Runner -up Award |
| VPM | 5 | ASRTU Award | Minimum Operational Cost Award (Without the element of tax) - Mofussil Services- (Group-III - 1001-4000) - 30.93 CPKM | Winner Award |
| | 6 | ASRTU Award | Highest KMPL 5.48 STU having fleet between 1001 and 4000 - Mofussil Services | Winner Award |
| | 7 | ASRTU Award | Highest performance in Vehicle productivity- Mofussil Services(512.93 Eff. KMs/Veh/Day) | Runner -up Award |
| SLM | 8 | ASRTU Award | Winner for the Highest Tyre performance (3.58 Moving avg. of new tyre consumed per lakh eff. Kms during 2014-15 to 2016-17) for the year 2016-17 among the STUs operating Mofussil Services for the 4th consecutive year | WINNER-Certificate |
| CBE | 9 | ASRTU Award | Maximum improvement in KMPL Coimbatore city (4.84 to 5.03 KMPL) | Winner Award |
| KUM | 10 | ASRTU Award | Highest Tyre performance (3.79 - Moving avg. of new tyre consumed per lakhs eff. Kms. During 2014-15 to 2016-17) | Winner Award |
| | 11 | ASRTU Award | Winner for the Highest KMPL(5.51 KMPL- STU having fleet between 1001 and 4000)- Same awardin the 4th consecutive year) | WINNER-Certificate |

**Date of Award : 27th Feb 2018 at Constitution Club of India, Rafi Marg, Behind RBI, New Delhi**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**